வாக்குமூலம்

உரிமையியல்மற்றும்குற்றவியல்நடுவர்நீதிமன்றம், மாதவரம்.

வழக்குஎண். CC 30/2019

வழக்குசாட்சி LW1/PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயந்தி | ஜாதி | |
| கணவர்/தந்தை | திருதேவசேனாபதி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 54 |

தேதி 20.07.2026

எதிரிகள் ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் மாதவரம் பகுதியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 02.06.2015 அன்று காலை 7 மணிக்கு என் மகளை பள்ளிக்கு அனுப்புவதற்காக நான் வெளியே வந்த போது எதிர்வீட்டில் குடியிருக்கும் ஆஜர் எதிரிகள் ஆன விஸ்வநாதன் , பாஞ்சாலை (எ) பத்மாவதி, தனசேகர் (எ) மணிகண்டன் ஆகியோர் வெளியே வந்து விஸ்வநாதன் என்னிடம் ரோட்டில் மாட்டிற்கு தண்ணீர் வைத்துக் கொண்டிருந்தார். சிறிய பாதை என்பதால் மாடு குறுக்கே நின்றுக்கொண்டிருந்த்தால் எங்களால் தாண்டி போக முடியவில்லை. அதனால் மாட்டை ஓரமாக அனுப்புமாறு கேட்டேன்.

அப்போது அவர் வீட்டில் இருந்து கேட்டை திறந்துக் கொண்டு வெளியே வந்த தனசேகர் (எ) மணிகண்டன் என்பவர் அறுவறுக்கத்தக்க வார்தைகளால் திட்டி கொண்டு என்னுடைய இரு தோள்களையும் இரு கைகளால் பிடித்துக் கொண்டு பாஞ்சாலை பக்கெட்டில் மாட்டிற்காக வைத்திருந்த தண்ணியை எடுத்து என் மீது ஓங்கி ஊற்றி இவளை கொல்லுங்கடா என்று கத்திக் கொண்டு

இவளால் தான் ரோடு போட முடியவில்லை என்று திட்டிக் கொண்டு விஸ்வநாதன் அருகில் இருந்த செங்கல்லைக் கொண்டு நாக்கை மடக்கிக் கொண்டு இவளை சாகடிங்கடா என்று சொல்லிக்கொண்டே எனது இடது காதிலும், நெஞ்சிலும் குத்தினார்.

என் மகள் அதை தடுக்க வந்த போது பாஞ்சாலை எனது மகளையும் பக்கெட்டால் தாக்கினார். காதில் குத்தியதால் எனக்கு அதிகமான இரத்தம் வந்தது. மேலும் என்னை கீழே தள்ளி என் நெஞ்சில் தனசேகர் (எ) மணிகண்டன் மிதித்தார். சத்தம் போட்டு அலறினேன். என் கண்ணாடி முழுவதும் தண்ணீர் இருந்ததால் என்னால் பார்க்க முடியவில்லை. சத்தம் கேட்டு என் குடும்பத்தார் அங்கு வந்தார்கள். எனது அக்கா மகள் 100க்கு தகவல் சொல்லி போலீசார் அங்கு வந்தார்கள். நான் வெகுநேரம் ஆகியும் மயக்கத்தில் இருந்தேன். பின்னர் என் குடும்பத்தினர் என்னை அண்ணா நகரில் உள்ள சுந்தரம் மெடிக்கல் பவுன்டேஷன் என்ற மருத்துவமனைக்கு அவசர சிக்கை பிரிவில் சேர்த்தார்கள். மேற்படி சம்பவத்தின் போது மேற்படி ஆஜர் எதிரிகள் அனைவரும் என்னை கொல்லுங்கடா என்று சொல்லி தாக்கினார்கள்.

பின்னர் மருத்துவமனைக்கு வந்து போலீசார் விசாரித்து சென்றார்கள். மருத்துவமனையில் போலீஸ் கேஸ் ஆகையால் நாங்கள் வெகு நேரம் வைத்துக்கொள்ள மாட்டோம் என்று கூறி என்னை டிஸ்சார்ஜ் செய்துவிட்டார்கள். நான் எம்1 மாதவரம் காவல் நிலையம் சென்று மேற்படி சம்பவம் குறித்து புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் அளித்தது தான். மேற்படி புகாரானது அ.த.சா.ஆ.1 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணைச் செய்தார்கள். புகார் அளித்த பின்பு மறுநாள் நான் எனது தலைவலி, காது வலியும் அதிகமாக இருந்ததால் நான் மற்றொரு தனியார் மருத்துவமனை மருத்துவரான உதேஷ் கணபதி என்பவரிடம் சிகிச்சை எடுத்து வந்தேன்.

அவர் காது ஐவ்வு கிழிந்துள்ளதாகவும், நரம்புகள் பாதிக்கப்பட்டதாகவும் என்னை நரம்பு டாக்டரிடம் பரிந்துரைத்தார். நான்

இப்போது வரை நரம்பு டாக்டரிடம் சிகிச்சைப் பெற்று வருகிறேன். மீண்டும் போலீசார் என்னை ஒரு வாரத்திற்குள் மறுவிசாரணைச் செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிர் மனுதாரர்கள் வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் குறுக்கு விசாரணை இல்லை என முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை இல்லை.**